


**08.02.2025**

**தலைப்பு செய்திகள்**

1. **டெல்லி சட்டப்பேரவை தேர்தலில், பி.ஜே.பி. தனி** பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைக்கும் நிலையில் உள்ளது.

2. **ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில்** திமுக தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறது.

3. **கிராமங்கள் தன்னிறைவு பெறுவதற்கான பல்வேறு திட்டங்கள்** தமிழ்நாட்டில் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

4. **தமிழகத்தில், விவசாயிகளுக்கு கடந்த 3 ஆண்டுகளில்,** 2 லட்சம் இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக மின்துறை அமைச்சர் திரு.செந்தில்பாலாஜி கூறியுள்ளார்.

5. **சென்னை ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர்** இறுதியாட்டத்தில் ராம்குமார் ராமநாதன், சாகேத் மைனேனி இணை – ஜப்பான் இணையை இன்று எதிர்கொள்கிறது.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖

**தேர்தல்**

**டெல்லியில் 70 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு** நடைபெற்ற தேர்தலில் **BJP** தனி பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைக்க உள்ளது.

கடந்த 5-ம் தேதி இத்தொகுதிகளுக்கு நடைபெற்ற தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை இன்று நடைபெற்று வரும் நிலையில்,

பி.ஜே.பி. 43 இடங்களிலும்,

ஆம்ஆத்மி 17 இடங்களிலும் முன்னிலையில் உள்ளன.

இரு கட்சிகளும் தலா 5 இடங்களில் வெற்றிபெற்றுள்ளன.

ஆம்ஆத்மி கட்சி ஒருங்கிணைப்பாளர் திரு. அர்விந்த் கெஜ்ரிவால் பின்தங்கியுள்ள நிலையில், முன்னாள் துணை முதலமைச்சர் திரு. மனீஷ் சிசோடியா தோல்வியடைந்தார்.

70 சட்டப்பேரவை தொகுதிகளை கொண்ட புதுதில்லியில் ஆட்சியமைக்க 36 இடங்கள் தேவை என்ற நிலையில், பி.ஜே.பி. தற்போது 5 வெற்றியுடன் 43 இடங்களில் முன்னிலை வகிப்பது குறிப்பிடத்தக்கது.

பி.ஜே.பி. 27 ஆண்டுகளுக்கு பிறகு டெல்லியில் ஆட்சியை கைப்பற்றவுள்ள நிலையில், கட்சி தலைமையகத்தில் தொண்டர்கள் இனிப்பு வழங்கியும், மேளதாளங்களுடனும் வெற்றி கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖

**எல்.முருகன்**

டெல்லி சட்டப்பேரவை தேர்தல் முடிவுகள் பிரதமர் திரு. நரேந்திமோடியின் நல்லாட்சிக்கு கிடைத்த வெற்றி என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதலத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், கடந்த 10 ஆண்டுகளாக ஆம்ஆத்மி கட்சியின் செயல்பாடுகளை மக்கள் ஏற்கவில்லை என்பதை இம்முடிவுகள் வெளிப்படுத்துவதாக கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖

**ஈரோடு**

**ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தல்** வாக்குகள் இன்று எண்ணப்பட்டு வரும் நிலையில் திமுக வேட்பாளர் திரு. வி.சி.சந்திரகுமார் தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறார்

9-வது சுற்று முடிவில், திமுக வேட்பாளர் தமக்கு அடுத்தபடியாக வந்த, நாம்தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமியை காட்டிலும் 48 ஆயிரத்து 94 வாக்குகள் கூடுதலாக பெற்றுள்ளார்.

திமுக வேட்பாளர் 61 ஆயிரத்து 556 வாக்குகளையும்

நாம்தமிழர் கட்சி வேட்பாளர் 13 ஆயிரத்து 462 வாக்குகளையும் பெற்றனர்.

காங்கிரஸ் சட்டப்பேரவை உறுப்பினர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் உடல்நலகுறைவு காரணமாக காலமானதையடுத்து இத்தொகுதியில் இடைத்தேர்தல் நடைபெற்றது.

❖❖❖❖❖❖

**மில்கிபூர்**

உத்திரபிரதேச மாநிலம் மில்கிபூர் சட்டப்பேரவை தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் பி.ஜே.பி. உறுப்பினர் சந்திரபானு பாஸ்வான் 48 ஆயிரத்திற்கும் அதிகமான வாக்குகள் முன்னிலை வகித்து வருகிறார்.

❖❖❖❖❖❖

**பிரதமர்**

**பிரதமர் திரு.நரேந்திரமோடி ஃபிரான்ஸ் மற்றும்** அமெரிக்க நாடுகளில் வரும் திங்கட்கிழமை முதல் அரசுமுறை பயணம் மேற்கொள்கிறார்.

பாரீசில் செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாட்டில் பங்கேற்கும் பிரதமர், பாதுகாப்பு, வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் இருதரப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து அதிபர் இம்மானுவேல் மேக்ரானுடன் ஆலோசனை மேற்கொள்கிறார்.

தொடர்ந்து வரும் புதன்கிழமை வாஷிங்டன் செல்லும் பிரதமர், அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்புடன் குடியுரிமை விவகாரம் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து பேச்சுவார்த்தை மேற்கொள்கிறார்.

❖❖❖❖❖❖

**பரிக்ஷா பே சர்ச்சா**

**நாடுமுழுவதும் பொதுத்தேர்வு எழுதவிருக்கும்** மாணாக்கரிடையே, பிரதமர் திரு.நரேந்திரமோடி 8-வது முறையாக **பரிக்ஷா பே சர்ச்சா** நிகழ்வில் நாளைமறுநாள் கலந்துரையாடுகிறார்.

பிரதமரின் இந்நிகழ்வை மாநிலம் முழுவதும் மாணாக்கர் ஆவலுடன் எதிர்நோக்கியுள்ள நிலையில் சேலத்தை சேர்ந்த மாணவர்கள் தேர்வு குறித்த

அழுத்தத்தை போக்கும் வகையில் பிரதமரின் கலந்துரையாடல் இருப்பதால் இதனை வரவேற்பதாக மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர்

.. **வாய்ஸ்** ..

மாணவ மாணவிகளின் தேர்வு அழுத்தத்தை போக்கும் வகையில் ஆண்டுதோறும் தேர்வு காலங்களில் பிரதமர் திரு நரேந்திர மோடி, பரிக்ஷா பே சர்ச்சா நிகழ்வில் உரையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டு பல்வேறு துறை சார்ந்த வல்லுநர்கள் இக்கலந்துரையாடலில் பங்கேற்க உள்ளனர்.

❖❖❖❖❖❖

**ஊக்கத்தொகை**

**தமிழக கிரிக்கெட் வீராங்கனை செல்வி. கமாலினி,** கோ - கோ விளையாட்டு வீரர் வி.சுப்ரமணி ஆகியோருக்கு தலா 25 லட்சம் ரூபாய் ஊக்க தொகை அறிவித்து முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் இன்று ஆணை பிறப்பித்துள்ளார்.

மலேஷியாவில் நடைபெற்ற மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி வெற்றிபெற செல்வி கமாலினியும்,

புதுதில்லியில் கோ- கோ உலககோப்பை ஆடவர் பிரிவில் இந்திய அணி வெற்றிபெற சுப்ரமணியனும் சிறப்பான பங்களிப்பை வழங்கியதை பாராட்டும் வகையில் இந்நடவடிக்கை.

❖❖❖❖❖❖

**தங்கம் தென்னரசு**

**தமிழகத்தில் கிராமங்கள் தன்னிறைவு பெறுவதற்கான** பல்வேறு திட்டங்கள் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில நிதியமைச்சர் திரு. தங்கம்தென்னரசு தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் காரியாப்பட்டியில் இன்று நடைபெற்ற அரசு விழாவில் உரையாற்றிய அவர், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், சாலை, பள்ளிகள், மருத்துவ வசதி உள்ளிட்ட கிராமங்களின் வளர்ச்சிக்கான அனைத்து அடிப்படை வசதிகளும் மேம்படுத்தப்படுவதை சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்ச்சியில் 603 பயனாளிகளுக்கு ஒருகோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர் வழங்கினார்.

❖❖❖❖❖❖

**கோவை – மலர் கண்காட்சி**

**தமிழகத்தில் கடந்த 3 ஆண்டுகளில் 2 லட்சம்** விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டு உள்ளதாக மாநில மின்துறை அமைச்சர் திரு. செந்தில்பாலாஜி தெரிவித்துள்ளார்.

கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் 7-வது மலர்கண்காட்சியை இன்று தொடங்கிவைத்து பேசியஅவர், வேளாண் துறைக்கு முக்கியத்துவம் அளிக்கும் திட்டங்களை அரசு செயல்படுத்துவதாக கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மாநில வேளாண் அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், இலவச மின் இணைப்புகளால் வேளாண் உற்பத்தி அதிகரித்து உள்ளதாக கூறினார்.

அதிக லாபம் தரக்கூடிய பயிர்களை கண்டறிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

வரும் 12-ம் தேதிவரை நடைபெறும் இம்மலர் கண்காட்சியில் அரியவகை மலர்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட கலைநயம் மிக்க வடிவங்கள் பார்வையாளர்களை பெரிதும் கவர்ந்துள்ளன.

❖❖❖❖❖❖

**ஜே.ராதாகிருஷ்ணன்**

**தமிழகத்தில் ஆயிரம் முதல்வர்** மருந்தகங்களை இம்மாதம் தொடங்குவதற்கான பணிகள் நடைபெற்று வருவதாக கூட்டுறவு உணவு பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமை செயலர் டாக்டர் ஜே.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் முதல்வர் மருந்தகம் குறித்து இன்று ஆய்வு மேற்கொண்ட அவர், தகுதியுடைய தனிநபர்களுக்கு இதற்கான உரிமம் வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖

**துறைமுகம்**

**விழுப்புரம் மாவட்டம் மரக்காணத்தில் மத்திய** அரசின் சாகர் பரிக்ரமா திட்டத்தின் கீழ் 235 கோடி ரூபாய் மதிப்பிலான மீன்பிடி துறைமுகம், மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஷேக் அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖

சிவாலய ஓட்டம்

**கன்னியாகுமரி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற சிவாலய** ஓட்டத்தை முன்னிட்டு போக்குவரத்துக் கழகம் சார்பில், வரும் 24-ம் தேதி மார்த்தாண்டம், திக்குறிச்சி, திற்பரப்பு, திருநந்திக்கரை, பொன்மலை உள்ளிட்ட 12 இடங்களுக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖

இருவரி

**நெல்லை மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கு முறையாக** பராமரிக்கப்படும் என புதிய ஆட்சித் தலைவர் டாக்டர் சுகுமார் தெரிவித்துள்ளார்.

ஆட்சித்தலைவராக இன்று பொறுப்பேற்ற அவர், மக்கள் மனுநீதி முகாமில் பெறப்படும் மனுக்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தி விரைவான தீர்வு எட்டப்படும் என்றார்.

**சிவகங்கை மாவட்டத்தில் நடப்பு கல்வியாண்டில்** புதிய பள்ளிகள் தொடங்குதல், அங்கீகாரம் புதுப்பித்தல், தொழிற்பள்ளிகளில் கூடுதல் அலகுகள் தொடங்குதல் உள்ளிட்டவற்றிற்கு வரும் 28-ம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷாஅஜித் தெரிவித்துள்ளார்.

**தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில்** பொதுவிநியோக குறைதீர் முகாம் இன்று நடைபெற்றது.

**நாமக்கல் மாவட்டம் செம்மேடு வல்வில்ஓரி அரசு** பழங்குடியினர்நல மேல்நிலைப்பள்ளியில் மக்கள் தொடர்பு திட்ட முகாம் இன்று நடைபெற்றது.

**நாமக்கல் மாவட்டம் செம்மேடு வல்வில் ஓரி அரசு** பழங்குடியினர் நல மேல்நிலைப்பள்ளியில் மக்கள் தொடர்பு திட்ட முகாம் இன்று நடைபெற்றது.

**வள்ளலார் நினைவுதினத்தை முன்னிட்டு திருச்சி** மாவட்டத்தில் அனைத்து மதுபான கடைகளும் வரும் செவ்வாய்க்கிழமை மூடப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் தெரிவித்துள்ளார்.

**மயிலாடுதுறையில் போதைக்கு எதிரான** விழிப்புணர்வு மாரத்தான் போட்டியை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. ஜி.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

காவல்துறையினர், மாணாக்கர், பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் இதில் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖

**டென்னிஸ்**

**சென்னை ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர்** இறுதியாட்டத்தில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன், சாகேத் மைனேனி இணை – ஜப்பானின் **Shintaro, Kaito** இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு** இடையேயான இரண்டாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி கட்டக்கில் நாளை நடைபெறுகிறது.

3 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

3-வது இறுதி போட்டி, அஹமதாபாத்தில் வரும் புதன்கிழமை நடைபெறும்.

❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖